1970 ஆகஸ்ட் 31]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வசித்த வீட்டை அரசாங்கம் கையகப்படுத்தி, நினைவுச்சின்னமாக ஏற்படுத்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய விவரம் தனியாக வரும்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, பாரதியாரைப் போலவே தேச விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த திருப்பூர் குமரன், மொழிப் போராட்டத்திலே மாண்டவர்கள் போன்றவர்களுக்கும் நினைவுச் சின்னம் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தேச விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட திருப்பூர் குமரன் போன்றவர்களுக்கு வேறு பல வகைகளிலே நினைவுச்சின்னம் அமைக்க முயற்சி எடுத்துவருகிறார்கள். எப்படிப்பட்ட நினைவுச் சின்னம் என்பது பற்றிய விவரம் தெரியவில்லை. வாய்ப்பு ஏற்படுகிறபோது அரசாங்கம் இதைக் கவனிக்கும்.

மாம்பழம் ஏற்றுமதி

* 144 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகின்றதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எந்தெந்த வகையான மாம்பழங்கள், எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன ? ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு ரூபாய்க்கு இந்த மாம்பழ வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அல்பான்ஸோ, பெங்களூரா, நீலம் ஆகிய மாம்பழ வகைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த மாம்பழ வகைகள் மலேயா, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா நார்வே, ஏடன், ஜெர்மானியக் கூட்டாட்சி குடியரசு (கிழக்கு ஜெர்மனி) ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 1968–69-ம் ஆண்டு வரையிலும் ஏற்றுமதி செய்யப்பட்ட மாம்பழ வகைகளின் மொத்த எண்ணிக்கை, 3,41,559 ரூபாய் மதிப்புள்ளது ஆகும். பல தரப்பட்ட மாம்பழ வகைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. சர்க்கரை சேர்க்கப்படாத மாம்பழச் சட்னி, சர்க்கரை சேர்க்கப்பட்ட மாம்பழச் சட்னி, உப்பு நீரில் இடப்பட்ட மாங்காய்த்துண்டு, உலர்த்தப்பட்ட மாங்காய்த் துண்டுகள், மாம்பழ மாவு, பழ ஊறல், பழப் பாகு, பழச்சாறு, கறிகாய்ச் சாறு, இன்தேம்பாகுநீரில் பாதுகாக்கப்பட்ட பழங்கள் போன்ற வகைகளில் எல்லாம் அனுப்பப்படுகின்றன.

இந்தியாவிலேகூட ஏனைய மாநிலங்களுக்கும் மாம்பழம் அனுப்பப்படுகிறது. வட ஆற்காடு, சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் பிற மாநிலங்களுக்கு மாம்பழத்தை ஏற்றுமதி செய்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து நாக்பூர், பம்பாய், கல்கத்தா, டெல்லி, அம்ரோடி, கந்த்வா, அகோலா, ஜால்கான், ரெய்பர், பிலாஸ்பர், உஜ்ஜெயின் முதலிய இடங்களுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மாம்பழத்தில் பெருமளவு மைசூர் மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பம்பாய்க்கும் சிறிதளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலிருந்து பம்பாய், கேரளம், ஆகிய மாநிலங்களுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆக, இந்த மாவட்டங்களிலிருந்து இந்தியாவிலுள்ள பல மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழத்தின் மொத்த அளவு ஆண்டொன்றுக்குக் கிட்டத்தட்ட 34 ஆயிரம் டன் என மதிப்பிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் தேயிலை உற்பத்தி

* 145 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தேயிலை உற்பத்தியைப் பெருக்குவதற்குப் புதிதாக இடங்களை அரசு தேர்ந்தெடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம். நீலகிரி மாவட்டத்தில் தேயிலையை மும்முரமாகப் பயிரிடுவதற்காக உழவர்களுக்கு நிலவள வங்கிகள் மூலம் நீண்டகாலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. பம்பாய், வேளாண்மை மறுநிதிக்கழகத்தின் நிதி உதவியுடன் இத் திட்டம் செயல்படுகிறது. இந்திய அரசின் நிதி உதவியுடன் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்களுக்காக ஒரு திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது.

(இ) விவர அறிக்கை : ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தேயிலை வாரியத்திடமிருந்து உரிமம் பெறுவதில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளனவா ? இத்திட்டம் நிறைவேற்ற எடுத்துக்கொண்ட முதல் ஆண்டில் என்ன இடர்பாடுகள்? அரசாங்கமே சொந்தமாகத் தேயிலை உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் புதிய இடங்களைத் தேர்ந்தெடுத்து தேயிலை பயிரிடப் போவதாக செய்தி கிடைத்திருக்கிறதே, அது உண்மையா ?

---

*இம் பக்கத்தினில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது